# பரம நம்பிக்கை

ஜெபம் பண்ணி விழித்திருங்கள்

உமக்குப் பிரியமானதைச் செய்ய எனக்குப் போதித்தருளும்

ESTD. : 1978

(சங். 143:10)

மலர் - 49 மே – 2026 இதழ் 76


# சீயோனில் காணப்பட பெலனடைவோம்

(சகோதரி ரீட்டா ஏசாயா)

**ஏசாயா 41:10 – நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம் பண்ணுவேன். என் நீதியின் வலது கரத்தினால் உன்னைத் தாங்குவேன்.**

வாசக நேயர்களே! மீண்டுமாய் இவ்விதழ் மூலம் உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறோம். "நான் உன்னை பலப்படுத்துவேன்" என்று சொன்ன தேவன் இம்மட்டும் நம்மை பலப்படுத்தி நடத்தி வருகிறார். அவருக்கு மகிமையுண்டாவதாக. "அவர்கள் பலத்தின் மேல் பலனடைந்து சீயோனிலே தேவ சந்நிதியில் வந்து காணப்படுவார்கள்" (சங். 84:7) என்ற வசனத்தை இவ்விதழிலே தியானிக்கப்போகிறோம்.

பலத்தின் மேல் பலனடைந்து சீயோனிலே தேவ சந்நிதியில் வந்து காணப்படுகிறவர்கள் யார் என்றால் சங்.84:6ல் கூறப்பட்டுள்ளது போல், "அழுகையின் பள்ளத் தாக்கை உருவ நடந்து அதை நீரூற்றாக்கிக் கொண்டவர்கள் என்று பார்க்கிறோம். அப்படியானால் கண்ணீரின் பாதையில், அதாவது உபத்திரவத்தின் பாதையில் கடந்து செல்கிற தேவ பிள்ளைகளை அவர் பலப்படுத்தி சீயோனிலே தேவ சந்நிதியில் காணப்படச் செய்கிறார். பலவிதமான பாடுகளின் வழியாக செல்கிற தேவ பிள்ளைகளை அவர் எவ்விதம் பலப்படுத்துகிறார் என்பதை தியானிப்போம்.

இயேசு கிறிஸ்துவின் வருகை மிகவும் சமீபம். நாம் அவர் வருகையில் காணப்பட வேண்டுமானால் நாம் பலனடைய வேண்டும். இந்த உலகத்திலே நமக்குப் பலவிதமான பாடுகளும் வியாதிகளும், போராட்டங்களும் இருக்கிறது. இது ஒரு கண்ணீரின் பாதை. ஆனால் இதின் நடுவில் நம்மை பலப்படுத்துகிற தேவன் இருக்கிறார். அவர் கலங்கி போய் இருந்த அவருடைய சீஷர்களைப் பார்த்து நீங்கள் எருசலேமை விட்டுப் போகாமல் என்னிடத்தில் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள். பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும் போது நீங்கள் பெலனடைந்து சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார். அதுபோலவே அவர்கள் காத்திருந்து பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்று சாட்சிகளாய் ஜீவித்தார்கள். அவர்களுக்கு அநேகம் போராட்டங்கள் இருந்தாலும் ஆவியானவர் அவர்களை பலப்படுத்தினார். பலத்தின் மேல் பலனடைந்து சீயோனிலே தேவ சந்நிதியில் நிற்க வாஞ்சித்த தேவ பிள்ளைகளின் அனுபவங்களை தியானிப்போம்.

**I. கிறிஸ்துவுக்குள் பெலனடைந்த பவுல்:–** (பிலி. 4:13)

அப்.பவுலைக் குறித்துப் பார்க்கும் போது, சீஷர்களைப் பயமுறுத்தி அவர்களை உபத்திரவப்படுத்தி கொலை செய்ய வேண்டும் என்பதில் மிகுந்த ஆர்வம் கொண்ட மனிதனாய் இருந்தான். அவனை இயேசு சடுதி ஒளியில் சந்தித்தார். அவனோடு பேசினார். அதன்பின் அவன் வாழ்க்கை முற்றிலுமாய் மாறினது. அவன் இயேசுவுக்காக வைராக்கியமாய் ஜீவிக்க ஆரம்பித்தான் என்று பார்க்கிறோம்.

அதன்பின் அவன் வாழ்க்கையில் அநேகம் பாடுகள், பிரச்சனைகள், சரீரத்தில் பெலவீனங்கள் இப்படியாக அநேக கண்ணீரின் பாதை வழியாக கடந்து செல்ல வேண்டியதாக இருந்தது. அழுகையின் பள்ளத்தாக்கை உருவ நடந்து அதை நீரூற்றாக்கிக் கொள்கிறார்கள் என்று சொல்லப்பட்டுள்ளது போல எல்லா பாடுகளையும் சந்தோஷமாக சகித்தார். பிலி. 3:6–14 வரையுள்ள வசனங்களில் சொல்லப்பட்டுள்ளது போல, கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக் கொள்வதற்காகவும், அவரை அறிகிற அறிவின் மேன்மைக்காகவும் எல்லாவற்றையும் நஷ்டமும் குப்பையுமாக எண்ணுகிறேன் என்கிறார். மேலும் பின்னானவைகளை மறந்து முன்னானவைகளை நாடி கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கி தொடருகிறேன் என்றும் எபி.12:1ல் விசுவாசத்தை துவக்குகிறவரும் முடிக்கிறவருமாகிய

இயேசுவை நோக்கி நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம் என்றும் கூறுகிறார்.

அப்படியானால் உலக பாடுகள், வேதனைகள் அவரை ஒன்றுமே செய்ய முடியவில்லை. அதுதான் அழுகையின் பள்ளத்தாக்கை உருக நடந்து போய் அதை நீரூற்றாக்கிக் கொள்கிற அனுபவமாகும். அவர்கள் பலத்தில் மேல் பலம் அடைந்து சீயோனிலே தேவ சந்நிதியில் காணப்படுவார்கள் என்று சொல்லப்பட்டது போல அவரும் இயேசுவை வாஞ்சித்து அவரை உறுதியாய் பற்றிக் கொண்ட படியினால் உலகபாடுகள் மேற்கொள்ள முடியவில்லை. அவர் வாஞ்சித்த சீயோனை கண்டடைந்தார்.

## II.கிறிஸ்துவுக்குள் பெலனடைந்த பேதுரு: (I பேது. 5:10)

சீமோன் பேதுரு இயேசுவோடு இருந்த சீஷன்; இயேசு பேதுருவை மிகவும் அதிகமாய் நேசித்தார். இயேசுவோடு கூடவே இருந்து அநேகம் காரியங்களைக் கற்றுக் கொண்டவர். ஆனால் இயேசுவை சிலுவையில் அறையும் படியாக பிடித்துக் கொண்டு போன வேளையில் அவருக்கு என்ன நடக்குமோ என்று பார்க்கப் போனவர் வேலைக்காரிக்கு முன்பாக இயேசுவை மூன்று முறை மறுதலித்தான். அதன் பின் மனங்கசந்து அழுதான் என்று பார்க்கிறோம்.

இயேசு மரித்து உயிர்த்தெழுந்த பின் சீஷர்களை, காத்திருந்து ஜெபிக்கச் சொன்னார். அவர்கள் ஜெபித்து பரிசுத்த ஆவியினால் நிரப்பப் பட்டப்பின், பேதுரு எழுந்து நின்று தைரியமாய் பிரசங்கித்தார். மூவாயிரம் பேர் இரட்சிக்கப்பட்டார்கள். பரிசுத்த ஆவியினால் பெலப்படுத்தப்பட்டப் பேதுருவைக் கொண்டு அநேக அற்புத அடையாளங்கள் நடந்தன. எத்தனையோ போராட்டங்கள் அடிகள், அவமானங்கள் வந்தது. அவருடைய நாமத்துக்காக அவமானப் படுவதற்குப் பாத்திரராக எண்ணப்பட்டப் படியினால் சந்தோஷமாய் ஆலோசனைச் சங்கத்தை விட்டுப் புறப்பட்டார்கள் என்று பார்க்கிறோம். (அப்.5:41) எத்தனையோ கட்டுகள் சிறையின் அனுபவங்களை அடைந்தார். I பேதுரு 1:7ல் அழிந்து போகிற பொன் அக்கினியினால் சோதிக்கப்படும்; அதைப் பார்க்கிலும் அதிக விரையேறப் பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசு கிறிஸ்து வெளிப்படும் போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும் என்கிறார்.

பாடுகளில் சோர்ந்து போகவில்லை. தேவ மகிமையடைவோம் என்கிற நம்பிக்கையிலே கண்ணீரின் பாதையை நீரூற்றாக்கிக் கொண்டார்கள். எனவே கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மைத் தமது நித்திய மகிமைக்கு அழைத்தவராயிருக்கிற சகல கிருபையும் பொருந்திய தேவன் தாமே கொஞ்சக் காலம் பாடனுபவிக்கிற உங்களைச் சீர்படுத்தி ஸ்திரப்படுத்தி பலப்படுத்தி நிலை நிறுத்துவாராக என்கிறார் (I பேது. 5:10) இவர் கிறிஸ்துவுக்குள் பலத்தின் மேல் பலனடைந்தவர்.

## III.கிறிஸ்துவுக்குள் பெலனடைந்த அப்.யோவான் (யோ.16:33)

கடைசியாக அப். யோவானைக் குறித்து பார்க்கப் போகிறோம். யோவான் இயேசுவின் சீஷர்களில் மிகவும் அதிகமாய் இயேசுவை நேசித்த சீஷன். இயேசுவின் மார்பில் சாந்து கொண்டிருந்தவன். யோவான் எழுதின சுவிசேஷம் மற்ற சுவிசேஷங்களை விட மிகவும் வித்தியாசமான ஒன்றாகும். அதுபோல யோவான் எழுதின மூன்று நிருபங்களும் மிகவும் வித்தியாசமாகவும் தேவ அன்பைக் குறித்தே அதிகமாக எழுதப்பட்டிருக்கிறதைக் காணலாம். பரிசுத்த ஆவியினாலே இவருடைய இருதயத்துக்குள் தேவ அன்பு ஊற்றப் பட்டப்படியினால் அவர் தேவ அன்பினால் அதிகமாகக் கட்டப்பட்டவராகக் காணப்பட்டார்.

அவரை கொதிக்கிற எண்ணைக் கொப்பரையில் போட்டு வதைத்தார்களாம். அவர் மரித்துப் போனார் என்று எண்ணி தூக்கி வெளியே போட்டார்களாம். அவர் உயிரோடு எழுந்து நடந்து போனார் என்று சரித்திர ஆசிரியர்கள் சொல்லுகிறார்கள். அதன்பின் நாடு கடத்தி பத்மு தீவில் போட்டார்களாம். அங்கேதான் "கர்த்தருடைய நாளில் ஆவிக்குள்ளானேன்" என்கிறார். பாடுகளினால் அவரை ஒன்றும் செய்ய முடியவில்லை. ஆவிக்குள்ளான யோவான் பரம தரிசனங்களைக் கண்டு வெளிப்படுத்தின விசேஷத்தையே எழுதியிருக்கிறார். அவர் மூலமாகத்தான் நாம் பரம தரிசனங்களை அறிந்து கொள்ள முடிந்திருக்கிறது. மேன்மையான இராஜ்யத்துக்காக எல்லா கண்ணீரின் பாதைகளையும் உருவ நடந்து சென்றார்.

அருமையான தேவ பிள்ளைகளே! அழுகையின் பள்ளத்தாக்கை உறுவ நடந்து அதை நீரூற்றாக்கி கொண்ட தேவ பிள்ளைகள் பலத்தின் மேல் பலனடைந்து சீயோனிலே தேவ சந்நிதியில் வந்து காணப்படுவார்கள் என்று சொல்லப்பட்டது போல அப்.பவுலும், அப்பேதுருவும், அப்.யோவானும் எப்படிக்கடந்து சென்றார்கள் என்று பார்த்தோம். இயேசுவின் வருகைக்காகக் காத்திருக்கும் தேவ பிள்ளைகளே! நாமும் அவ்விதமே பலத்தின் மேல் பலமடைவோம். தேவ கிருபை நம்மனைவரோடும் இருப்பதாக!

# ஆசிரியர் கடிதம்

இனிய இயேசு கிறிஸ்துவுக்குள் அன்புள்ள பரம நம்பிக்கை பங்காளர்களே! உங்களுக்கு எங்கள் அன்பின் வாழ்த்துக்கள்.

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் இந்த வருடத்தின் ஐந்தாவது மாதத்தைக் காணச்செய்த தேவனைத் துதிப்போம். அவர் கிருபை என்றுமுள்ளது.

இந்த இழக்கிய ஊழியமானது இந்த மே மாதம் 15ம் தேதியோடு 49 வருடங்களை முடிக்கிறது. (1977–2026) இத்தனை ஆண்டுகாலமாக இந்த ஊழியத்தைக் கர்த்தர் அற்புதமாக நடத்தி வந்தார். அவருக்கே மகிமையுண்டாவதாக! பாஸ்டர் அவர்கள் கர்த்தர் சொன்னார் என்று இந்த ஊழியத்தை ஆரம்பித்து விசுவாசத்திலே நடத்தி வந்தார்கள். இப்பொழுது அவர்கள் மகிமைக்குள் பிரவேசித்து ஒரு வருடமாகிறது. கடந்த வருடம் முழுவதும் இந்த ஊழியத்தை செய்ய கர்த்தர் எங்களுக்குப் பாராட்டின கிருபைக்காக அவருக்கு நன்றி செலுத்துகிறோம்.

கடந்த மாதம் 14ம் தேதி வாலிபர் முகாமை நடத்த தேவன் கிருபை செய்தார். அநேகப் பிள்ளைகள் வந்து தேவ ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்டார்கள். 22ம் தேதி பாஸ்டர் அவர்களுடைய முதலாம் ஆண்டு நினைவு ஆறுதல் கூட்டத்தை நடத்தக் கர்த்தர் கிருபை செய்தார். விசுவாசிகளின் சுவிசேஷ ஐக்கியத்தில் உள்ள தேவ ஊழியர்களும் மற்றும் விசுவாசிகளும் எங்களுக்கு அன்புக்குரியோர்களும் வந்து நல்ல சாட்சிகளையும் செய்திகளையும் பகிர்ந்து கொண்டு எங்களை ஆறுதல் படுத்தினார்கள். தேவனுக்கு மகிமையுண்டாவதாக. 27.4.26 முதல் 3.5.26 வரை **V.B.S.** நடத்தக் கர்த்தர் கிருபை செய்தார். மே மாதம் 9ம் தேதியோடு "விசுவாசிகளின் சுவிசேஷ ஐக்கியம்" 57 ஆண்டுகளை முடிக்கிறது. தேவனுக்கே மகிமையுண்டாவதாக கர்த்தர் கிருபையாய் இந்த ஊழியத்தை தாங்கி வருகிறார்.

கடந்த மாதம் "நீ பயப்படாதே நான் உனக்குக் கேடகமும் மகா பெரிய பலனுமாயிருக்கிறேன் என்று வாக்குப் பண்ணினார் (ஆதி 15:1) அதுபோலவே அவர் எங்களுக்குப் பலனாயிருந்தார்.

வழக்கமாக நடக்கிற எல்லா ஊழியங்களும் தவறாமல் நடக்கிது இந்த மே மாதம் 15ம் தேதி பத்திரிக்கை ஊழியத்துக்கான ஸ்தோத்திரக் கூட்டத்தை நடத்த வேண்டும். அதற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள். தொடர்ந்து எங்கள் எல்லா ஊழியர்களுக்காகவும், மாம்பலத்தில் சீக்கிரமாக ஒரு ஆராதனை ஸ்தலம் கிடைக்கவும் ஜெபித்துக் கொள்ளுங்கள். தேவன் தாமே நம்மை ஆசீர் வதிப்பாராக!

இப்படிக்கு
உங்கள் அன்பு சகோதரி
**ரீட்டா ஏசாயா**

## அறிவிப்பு

வாசக நேயர்களே! உங்கள் அன்புக்காகவும் ஜெபத்துக்காகவும் நன்றி செலுத்துகிறோம். தொடர்ந்து கர்த்தருடைய பெரிதான கிருபையினால் பாஸ்டர் அவர்கள் விட்டுச் சென்ற எல்லா ஊழியங்களையும் செய்து வருகிறோம். 'சிப்பியில் முத்து' வினா – விடை அனுப்புகிற தேவ பிள்ளைகளும் காணிக்கை அனுப்புகிற தேவ பிள்ளைகளும் தயவு செய்து பழைய விலாசத்தை மாற்றி புது விலாசத்தில் எங்களோடு தொடர்பு கொள்ளுங்கள். உங்கள் ஜெபக் குறிப்புகளை இதே விலாசத்திற்கு அனுப்புங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம் நன்றி!

எங்கள் புதிய விலாசம்

**Sis. Rita Isaiah**
**214/2, AVA Palace,**
**Flat G1, V.G.N. Padma Avenue,**
**Kolapakkam**
**Chennai - 600 128.**
**Ph : 9384710267, 9789893830**

உங்கள் ஜெபமும் ஆதரவும் எங்களுக்குத் தொடர்ந்து இருப்பதாக! நன்றி.

*Jesus Christ is coming very soon! Are you ready?*

PARAMA NAMBIKKAI

(Estd. 1978)

WATCH AND PRAY

Watch! Pray!! Be Holy!!!

MAY - 2026

# HE RAISES THE POOR AND LIFTS THE NEEDY

He raises the poor from the dust and lifts the needy from the ash heap; he seats them with Princes, with the Princes of his people. - Psalm 113:7-8 The above verse offers hope and encouragement, especially to those who feel overlooked, forgotten, or beaten down by life's struggles. It is also a reminder that God sees our situation and is willing to reach out and lift us up. It challenges believers to trust in God's ability to transform difficult circumstances and encourages us to follow God's example by showing kindness and support to those who are struggling around us. As God lifts the needy, we too are called to be His hands and feet in the world. God's heart sees the humble and the needy. The verse highlights God's compassion by emphasizing His willingness to reach down and help those who are in desperate situations. The image of raising the poor from the dust and lifting the needy from the ash heap paints a vivid picture of God's care for the marginalized and brokenhearted. This verse is a powerful reminder that no matter how low someone may have fallen, God has the power and willingness to lift them up. God's greatness is shown not only in His power but also in His kindness and love for the vulnerable. For the Israelites, who experienced hardship and oppression throughout their history, this verse would have been a comforting reminder of God's faithfulness to rescue and restore. God sees and cares for the lowest in society. Whatever situations we may be, beyond all limitations God lifts us up. Limitations are a reality of human existence. They may come in the form of background, lack of resources, delayed opportunities, opposition, weakness, or past mistakes. Many people resign themselves to these constraints, believing they will never rise beyond them. However, the God of Scripture specializes in lifting people beyond what confines them. He does not merely improve conditions; He changes positions. He takes individuals from

*Please 'Pray' for a permanent place in Mambalam for our Parama Nambikkai Ministries and obey as God says for this ministry to help us. You can download our messages every month through e-magazine from my website www.risaiah.com to show others as you are blessed.*

www.risaiah.com Pastor R. Isaiah

obscurity to prominence, from rejection to recognition, and from weakness to influence. When God steps into a life, ceilings become stepping stones. Barriers become bridges. The same God who lifted Joseph from prison to palace is still in the business of divine elevation. He is the God who lifts you above limitations. Joseph endured betrayal, slavery, and imprisonment, yet God elevated him to govern a nation proving that background cannot limit divine destiny. David was overlooked in his father's house, yet God anointed him for kingship. Ruth's foreign background did not stop God from grafting her into the lineage of greatness. Our financial hardship is not the final chapter when God is involved. The widow's limited oil became abundant through divine intervention. No man can stop your elevation. The place where you are humiliated and forsaken, God will help you and lift you in that place. He lifts you up from the miry clay and set your feet on the rock to stay. Don't worry about situations God is there for us, no one can stand against us. Jesus Christ is the ultimate fulfillment of God's promise to lift the needy and help the poor. Throughout His earthly ministry, Jesus demonstrated God's compassion by healing the sick, feeding the hungry, and reaching out to the marginalized. In Matthew 11:5, Jesus declared that the good news was being preached to the poor, showing that His mission was to bring hope and restoration to those who were downtrodden. Through His death and resurrection, Jesus lifted all of humanity from the dust of sin and despair, offering new life to all who believe in Him. Humble yourself before the Lord, and He will lift you up. Those who honor God are honored by Him. Promotion comes from the Lord, who sets one up and puts another down. Daniel remained faithful in Babylon despite pressure and opposition, and God elevated him to positions of authority in a foreign land demonstrating that faithfulness attracts lifting. We are called to praise the Lord our God because no one is like him and he is above all creations. However, He cares for us and lifts us. - Amen

**-Dr. S.Jehoashan Kingsly** Ph.D.,

## ATTENTION PLEASE

Your thanks giving testimonies, offerings, gifts, money orders are all welcomed, accepted and used for His Victorious ministry. Money may be sent through **net banking as in :**

**PARAMANAMBIKKAI MINISTRIES**
**(in India only)**
**CBS Code : 00073,**
**IFS Code: IDIB000A031**
**Current A/c. No.980288648**
**Indian Bank, Ashok Nagar, Chennai-83**

To My address:

Sis. Rita Isaiah
214/2, AVA Palace,Flat G1, V.G.N. Padma Avenue,
Kolapakkam, Chennai - 600 128.
**Ph : 044-24710267**
**Cell : +91 9384710267, 9789815830**
E-mail : pritaisaiah@gmail.com
Fax : 91-044-24710267
**Our website : www.risaiah.com**

# தேவனை விசுவாசிப்பதினால் கிடைக்கும் ஜெயம்!

கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு மகிமை உண்டாவதாக! கடந்த மாதம் முழுவதும் கர்த்தர் நம்மை கண்மணியை போல் காப்பாற்றினார். இந்த மாதத்திலும் பரம நம்பிக்கை இதழின் மூலமாக உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

இன்றைக்கு நாம் தியானிக்கப்போகிற தேவ வசனம் என்னவென்றால், விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது என்று எபிரேயர் 11:13ல் வாசிக்கிறோம். கர்த்தர் நமக்கு கொடுத்த வாக்குத்தத்தங்களை விசுவாசித்து அவைகளை பெற்றுகொள்ள வேண்டும். தேவன் நமக்கு கொடுக்க விரும்புகிற ஆசீர்வாதங்கள் காணப்படாதவைகளின் நிச்சயமாயிருக்கிறது.

**1. யோசுவாவும், காலேபையும் போல விசுவாச வார்த்தையை அறிக்கை செய்ய வேண்டும் (எண்.14–7,8)**

கானான் தேசத்தை சுற்றிப்பார்த்த யோசுவாவும் காலேபும் "இஸ்ரவேல் புத்திரனின் சமஸ்த சபையையும் நோக்கி; நாங்கள் போய்ச் சுற்றிப்பார்த்து சோதித்த தேசம் மகா நல்ல தேசம். கர்த்தர் நம்மேல் பிரியமாயிருந்தால், அந்த தேசத்திலே நம்மைக் கொண்டுபோய், பாலும் தேனும் ஓடுகிற அந்தத் தேசத்தை நமக்கு கொடுப்பார். காணப்படாத நிச்சயத்தை அவர்கள் விசுவாசித்து அறிக்கை செய்தபடியால், கர்த்தர் அவர்கள் இருவரையும் கானானுக்குள் பிரவேசிக்க செய்தார். தேவனை விசுவாசியாத ஒருவரும் கானானுக்குள் பிரவேசிக்க முடியவில்லை. தேவ பிள்ளைகளே நமக்கு தேவன் கொடுத்த வாக்குத்தத்தை விசுவாசியாமலிருந்தால், பரம கானானுக்குள் செல்லவே முடியாது. ஆகவே விசுவாச வார்த்தைகளை அறிக்கை செய்து, ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்வோம்".

**2. விசுவாசத்தோடே துதி செய்தால் எரிகோ கோட்டை தகர்ந்து விழும்**

யோசுவா 6:20ல் "எக்காளங்களை ஊதுகையில் ஜனங்கள் ஆர்ப்பரித்தார்கள்; எக்காள சத்தத்தை ஜனங்கள் கேட்டு, மகா ஆரவாரத்தோடே முழுங்குகையில் அலங்கம் இடிந்து விழுந்தது; இந்த வசனம் கர்த்தருடைய வார்த்தைகளுக்கு கீழ்ப்படிந்து, விசுவாசத்துடன் செயல்படும்போது, தடைகள் தகர்ந்து, வெற்றி கிடைக்கும். தேவ பிள்ளைகளே, எவ்வளவு பெரிதான விசுவாசம், மற்றும் கீழ்படிதல், ஏழு நாட்கள் ஜனங்கள் அந்த பட்டணத்தை சுற்றி நடந்து ஏழாவது நாள் எக்காளம் ஊதி ஆர்ப்பரித்தார்கள். அப்பொழுது அந்த எரிகோ பட்டணம் இடிந்து விழுந்தது. நாமும் நமக்கு நேரிடும் எரிகோ போன்ற துன்பங்கள் எதிராக நின்றாலும், விசுவாசித்து துதிக்கும்போது கர்த்தர் அந்த துன்பங்களிலிருந்து நமக்கு ஜெயத்தைக் கொடுப்பார்.

**3. சோதனைகளில் விசுவாசத்துடன் நிற்க வேண்டும்.**

தானியேல் 6ல் வாசிக்கும்போது, தானியேலுக்கு ஏற்பட்ட மிகப்பெரிய சோதனை என்னவென்றால், தேவனை சேவிக்காமல் ராஜாவை சேவிக்க வேண்டும். தானியேல் 6:10ல் "தானியேலோவென்றால், அந்த பத்திரத்துக்குக் கையெழுத்து வைக்கப்பட்டதென்று அறிந்தபோதிலும், தன் மேலறையிலே எருசலேமுக்கு நேராக பலகணிகள் திறந்திருக்க, அங்கே தான் முன் செய்துவந்த படியே தினம் மூன்று வேளையும் தன் தேவனுக்கு முன்பாக

முழங்கால் படியிட்டு ஜெபம் பண்ணி, ஸ்தோத்திரம் செலுத்தினான்" தானியேல் தேவன் மேலுள்ள விசுவாசத்தினால், சிங்கங்களின் கைக்கு தப்புவிப்பார் என்று முழு நிச்சயமாய் நம்பினான். கர்த்தர் தானியேலை சிங்கங்களின் வாய்க்கு தப்புவித்தார். ஆம் தேவ பிள்ளைகளே நம்மையும் பிசாசானவன் தேவ சமூகத்தில் ஜெபிக்க கூடாதபடி, தேவ ஆலயத்திற்கு செல்ல கூடாதபடி அநேக சோதனைகளை கொண்டு வரலாம். தானியேலை போல் நாமும் எந்த சோதனையிலும் கர்த்தரையே உறுதியாக சேவிப்போம். கர்த்தர் நம்மை எல்லா சோதனைகளிலிருந்து நம்மை விடுவித்து, நம்மை கனப்படுத்தி ஆசீர்வதித்து உயர்த்துவார்.

தேவ பிள்ளைகளே நாம் தியானித்த மூன்று காரியங்களிலும் விசுவாச வார்த்தை அறிக்கை செய்யும்பொழுது, துதித்து கீழ்படியும்பொழுது, சோதனையிலே கர்த்தருக்காக நிற்கும்பொழுது, பெரிய ஜெயத்தை பெற்று கொள்ளலாம் என்று பார்த்தோம். எபிரேயர் 12:6ல் "விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம், ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும் அவர் தம்மை தேடுகிறவர்களுக்கு பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும்" நாம் எப்போதும் தேவனிடத்தில் அன்பு கூர்ந்து விசுவாசத்தோடு ஜெபிப்போம். வேதத்திலே அன்னாளை சற்று தியானிப்போமானால், அவள் தேவனிடத்தில் கண்ணீரோடு ஜெபித்த பிறகு அவள் துக்கமுமாயிருக்கவில்லை. கர்த்தர் ஒரு குழந்தையை தந்துவிட்டார் என்று விசுவாசித்தாள். கர்த்தர் அந்த விசுவாசத்தை கனப்படுத்தி அவளுக்கு ஒரு ஆண் குழந்தையை கொடுத்தார். அதைபோலவே, நீங்களும் விசுவாசத்தோடே கர்த்தரிடத்தில் ஜெபிக்கிற ஒவ்வொரு விண்ணப்பங்களுக்கும் கர்த்தர் பதிலைத் தருவார், ஜெயத்தை தந்து, கனப்படுத்தி உயர்த்துவார். கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

**உங்கள் பிரயோஜனத்துக்காக**
**யூடியூப் (You Tube) :-**
Paramanambikkai Messages
Paramanambikkai Songs
Paramanambikkai Ministries
**பாருங்கள்**

**இடத்திற்காக**

மாம்பலத்தில் பரம நம்பிக்கை ஊழியங்களுக்கான ஒரு நிரந்தர இடத்தைக் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சீக்கிரமாக தர, அதிசயம் நடக்க, தேவ நாமம் மகிமைப்பட, பரிசுத்தாவியானவர் ஜெயம் தர ஜெபித்துக் கொள்ளுங்கள். – **www.risaiah.com**

**உங்கள் கவனத்திற்கு**

உன்னதப்பாட்டு – விளக்கவுரை சகோதரி ரீட்டா ஏசாயா எழுதியதைக் கொண்டு பரிசுத்தாவியானவர் கிரியை செய்து ஆத்துமாக்கள், சபைகள், தேவனுடைய நாளுக்கு ஆயத்தப்பட, நற்கிரியைகளைச் செய்ய ஸ்தோத்திரத்தோடு ஜெபித்துக் கொள்ளுங்கள். புத்தகம் தேவைப்படுவோர் **'Word of Christ'** விற்பனையாளரிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு வாங்கி பயனடையுங்கள் **(Phone Number 044-26613242)**. பரமநம்பிக்கை ஊழியங்களுக்காக, விசுவாசிகளின் சுவிசேஷ ஐக்கியத்திற்காக ஸ்தோத்திரத்தோடு ஜெபித்துக் கொள்ளுங்கள்.

*www.risaiah.com இணையதளம் மூலமாக அநேகர் மனந்திரும்பி, இரட்சிக்கப்பட்டு, புதுப் பிக்கப்பட (இரட்சிப்பு) இந்நாட்களில் "ஜெபியுங்கள்". நீங்களும் இந்நாட்களை பிரயோஜனப்படுத்திக் கொள்ள இச்செய்தியை உங்களுக்கு பகிர்ந்து கொள்ளுகிறேன்!*

*–போதகர் ஆர்.ஏசாயா*

## சிப்பியில் முத்து

**கடந்த மாத சிப்பியில் உள்ள முத்துக்கள்:**

| | | |
|---|---|---|
| 1. | மோசே | – யாத். 33:18 |
| 2. | மிரியாம் | – யாத். 15:21 |
| 3. | இக்கபோத் | – I சாமு 4:21 |
| 4. | யோபு | – யோபு.16:15 |
| 5. | தாவீது | – சங். 34:3 |
| 6. | ஓசியா | – ஓசி 9:11 |
| 7. | நாகூம் | – நாகூம் 2:2 |
| 8. | மரியாள் | – லூக்கா 1:46 |
| 9. | ஏரோது | – அப்.12:21–23 |
| 10. | பவுல் | – II கொரி 3:18 |

**கடந்தமாத சிப்பியில் உள்ள முத்துக்களைச் சரியாக கண்டெடுத்தவர்கள்:**

| | | |
|---|---|---|
| 1. | சகோ.சரோஜினி கோயில்பிச்சை | – பாளையங்கோட்டை |
| 2. | சகோ. தங்கம் ஐசக் | – வேலூர் |
| 3. | சகோ. ரதி ஜாய்ஸ் | – கே.கே.நகர் |
| 4. | சகோ. லில்லி புஷ்பம் | – மாம்பலம் |
| 5. | சகோ. எஸ்தர் பானு | – பொழிச்சலூர் |
| 6. | சகோ. எமிமா | – பொழிச்சலூர் |
| 7. | சகோ. ஜென்ஸி | – பொழிச்சலூர் |
| 8. | சகோ. பிரேமா ஜெயசேகர் | – வானகரம் |
| 9. | சகோ.மெர்ஸி கிங்ஸ்லி | – கொளப்பாக்கம் |
| 10. | சகோ. ரெஜினா வின்சென்ட் | – பெங்களூர் |
| 11. | சகோ. ராதா | – பெருமாள்புரம் |
| 12. | சகோ.வசந்த் கமாலியேல் | – சௌதி அரேபியா |
| 13. | சகோ. சித்ரா | – பெங்களூர் |
| 14. | சகோ. மேரி புஷ்பம் | – துரைபாக்கம் |
| 15. | சகோ. புனிதா அசரியா | – அண்ணா நகர் |
| 16. | சகோ. பெர்சிஸ் | – வேளச்சேரி |
| 17. | சகோ. கேத்தரின் கவிதா | – திருவண்ணாமலை |
| 18. | சகோ. ரெஜினா மேரி | – பெருமாள்புரம் |
| 19. | சகோ. தங்கத்தாய் | – பெருமாள்புரம் |
| 20. | சகோ. சிப்போராள் எபனேசர் | – மாம்பலம் |
| 21. | சகோ. எஸ்தர் டேவிட் | – கொளத்தூர் |
| 22. | சகோ. ஷீபா ஞானதுரை | – கோவை |
| 23. | சகோ.ஷேரன் நிர்மல்குமார் | – திருப்பத்தூர் |
| 24. | சகோ. இராஜகுமாரி | – எம்.ஜி.ஆர்.நகர் |
| 25. | சகோ. சுலோச்சனா | – எம்.ஜி.ஆர்.நகர் |
| 26. | சகோ. ஜெபா பெனியேல் | – எம்.ஜி.ஆர்.நகர் |
| 27. | சகோ. எப்சி இம்மானுவேல் | – எம்.ஜி.ஆர்.நகர் |
| 28. | சகோ. அருணா ஸ்டீபன் | – வண்டலூர் |
| 29. | சகோ. பவித்ரா | – திருவண்ணாமலை |
| 30. | சகோ. மார்கிரேட் ஜோ | – கோவை |
| 31. | சகோ. வைலட் பியூலா | – பெருமாள்புரம் |

உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டாக, சரியான முத்துக்களை முயற்சித்து எடுத்துத் தந்த உங்களுக்கு "வரிசை பிரகாரம் முதலில் பதில் அனுப்புபவர்கள் வரிசைப் படுத்தப்படுகிறீர்கள்", உங்களுக்கு எங்கள் அன்பான பாராட்டுக்கள்! சரியான முத்துக்களை எடுக்க முடியாதவர்களும் இவ்விதழிலே "முயற்சித்துப் பாருங்கள்." வெளிநாட்டு, உள்நாட்டு வாசகர்கள் முத்துக்களை isaiahr@hotmail.com இ-மெயிலிலும் அனுப்பலாம். ஒவ்வொரு மாதமும் 20-ம் தேதிக்குள் பதில் எழுதியனுப்பி எங்களை சந்தோஷப்படுத்துங்கள்.

## இம்மாத சிப்பிகள்

1. எட்டு வயதில் இராஜாவானவன் யார் ?
2. பன்னிரெண்டு வயதில் இராஜாவானவன் யார் ?
3. இருபத்தைந்து வயதில் இராஜாவானவன் யார் ?
4. இருபது வயதில் இராஜாவானவன் யார் ?
5. ஏழு வயதில் இராஜாவானவன் யார் ?
6. பதினாறு வயதில் இராஜாவானவன் யார் ?
7. முப்பது வயதில் பார்வேன் முன் நின்றவன் யார் ?
8. எண்பது வயதில் பார்வோனோடே பேசினவன் யார் ?
9. நூற்றுபத்து வயதில் மரணமடைந்த கர்த்தருடைய ஊழியக்காரன் யார் ?
10. நூற்று முப்பது வயதில் பார்வோனுக்கு முன்பாக நின்றவன் யார் ?

*குறிப்பு: உங்களுக்கு தெரிந்த மக்களுக்கு நமது பத்திரிகையை வாசிக்க, அறிமுகப்படுத்த எனது* **www.risaiah.com "E-Magazine'** *சென்று கீழ் இறக்கம்* **(Down Load)** *செய்து பெற்றுக் கொள்ளுமாறு தெரியப் படுத்துங்கள். அந்தந்த மாதத்திற்கு உரியது மட்டும் கீழ் இறக்கம் செய்யலாம்* **(Download)** *தொடர்ந்து எங்களுக்காக ஜெபியுங்கள்.* **ஆத்துமாக்கள் சாந்தி சமாதானம் அடைவார்களாக!** *புதிய விலாசங்களை எங்களுக்கு தெரியப்படுத்துங்கள்.*

**PRINTED BOOK** Book-Post
(Private Circulation Only)

To

If undelivered return to :
**Parama Nambikkai**
P.B. No.3276, Chennai - 600 033, South India.

**காணிக்கை ரூ.50.00**

Printed by Mr. Devavaram, Meipporul Achakam, 278, K.H. Road, Ayanavaram, Chennai - 600 023.
Published and editored, Owned by Sis. Rita Isaiah from at 23, Kodambakkam Road, West Mambalam, Chennai-33. for Paramanambikkai Ministries Trust.